*இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு*

## எஸ் குகதாசன் எதிர் பிரதேச செயலகம்- மாந்தை கிழக்கு

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கான மேன்முறையீடு [தனி நபர் விசாரணை]/[694/2021]/ ஆணையினை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ கூட்டத்தின் பகுதியாக ஏற்றல; [22.12.2021]

2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 32[1] இன் கீழான ஆணை மற்றும் 2017 ஆம் ஆண்டு தகவலறியும் உரிமை விதிகளின் விதி 28 இன் கிழான நடபடிமுறைகளின் குறிப்பு [கட்டணங்கள் மற்றும் மேன்முறையீட்டு நடபடிமுறைகள்]

**தலைவர்** : நீதவான். உபாலி அபேரத்ன (ஓய்வு)
**ஆணையாளர் :** சிரேஷ்ட சட்டத்தரணி கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன
**ஆணையாளர்** : நீதவான் ரோஹினி வல்கம (ஓய்வு)

**மேன்முறையீட்டாளர்**: எஸ் குகதாசன்
**அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது**: குறித்தளிக்கப்பட்ட அலுவலகர், பிரதேச செயலகம்- மாந்தை கிழக்கு

**சமூகமளித்தவர்.˙.பிரதிநிதி**:
மேன்முறையீட்டாளர்: சமூகமளிக்கவில்லை
பகிரங்க அதிகார சபை: எஸ். வினோதன் (MSO), எம். ஜேபாமயூரன்- செயலாளர்.

| | |
|---|---|
| தகவல் உரிமைக்கான கோரிக்கை பதியப்பட்ட திகதி | 01.12.2020 |
| தகவல் அலுவலகரின் பதிலளித்த திகதி | 16.12.2020 |
| குறித்தளிக்கப்பட்ட அலுவலகரிற்கு மேன்முறையீடு செய்த திகதி | 21.12.2020 |
| குறித்தளிக்கப்பட்ட அலுவலகர் பதிலளித்த திகதி | பதிலளிக்கவில்லை |
| தகவல் அறியும் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்த திகதி | 12.02.2021 |

**நிகழ்வு பற்றிய பின்னணியின் சுருக்கம்**

மேன்முறையீட்டாளர் பின்வரும் தகவல் கோரிக்கையினை 01.12.2020 அன்று பகிரங்க அதிகார சபையிடம் கோரியுள்ளார்

> ''ஒட்டறுத்த குளம் கிராம அலுவலர் பிரிவில் மத்திய வகுப்பு காணி 350 ஏக்கர் 14 பேர்ச் காணியினை 20 நபர்களுக்கு பங்கீடு செய்யப்பட்டது தொடர்பாக, அதில் உள்ள 21 நபர்களுடைய விபரம்
>
> 1. மஹாலட்சி-அரசசத்தினம், 2. நுடராசா – சத்தியசீலன், 3. எஸ். விமல், 4. ஏஸ். விமலராணி 5. அகஸ்ரின்-அருளப்பு 6. தமிழரசி-சிவா 7. ரமேஸ்-தேன்மொழி 8. கே. செல்வநாயகம் 9. கிருஸ்னபிள்ளை-கிருஷ்னவேனு 10. கிருஸ்ணபிள்ளை-கிருஸ்ணகாந்தா 11. கிருஸ்ணகிள்ளை-கீர்த்தனா 12. சகுந்தலா 13. வ. அரியரத்தினம் 14. கந்தையா- சண்முகநாதன் 15. நடராசா 16. ஆறுமுகம்-நவசுந்தரம் 17. துரைஜயா-குகநாதன் 18. ஜீவம்-பத்மமாலினி 19. சுப்ரமணியம்-தில்லைநாதன்''

தகவல் அலுவலர் 19.09.2019ஆம் திகதி, கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதப்பிரதினை இணைத்து மேன்முறையீட்டாளருக்கு பதிலளித்திருந்தார்.

தகவல் அலுவலரின் பதிலில் திருப்பியடையாத மேன்முறையீட்டாளர் 21.12.2020 அன்று குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீட்டினை மேற்கொண்டார். குறித்தளிக்கப்பட்ட அலுவலர் சட்டத்தில் குறித்தளிக்கப்பட்ட காலத்துள் பதிலளிக்க தவறியமை காரணமாக மேன்முறையீட்டாளர் 12.02.2021 அன்று ஆணைக்குழுவிற்கு மேன்முறையீட்டினை மேற்கொண்டிருந்தார்.

**விசாரணையின் போது தோன்றிய விடயங்கள்**

விசாரணைக்காக பகிரங்க அதிகார சபை சமூகமளித்த போதிலும் மேன்முறையீட்டாளர் சமூகமளித்திருக்கவில்லை.

மேன்முறையீட்டாளருக்கு ஏற்கனவே பதில் வழங்கப்பட்டுள்ளதாக பகிரங்க அதிகார சபை தெரிவித்ததோடு அப்பதிலின் பிரதியொன்றும் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டது.

**ஆணை**

இம் மேன்முறையீட்டின் நிகழ்வுகளின் அடிப்படையில் நோக்கும் போது, 2016ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் தகவலுக்கான உரிமைச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 31(3) இன் கீழ் விதந்துரைக்கப்பட்டுள்ள, தகவல்

கோரிக்கையின் போது, கட்டாயம் இணங்கியொழுக வேண்டிய கால வரையறைக்கு ஏற்ப பகிரங்க அதிகார சபை செயல்படத் தவறியுள்ளமை தெளிவாகின்றது.

31(3):

*ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் மீதான முடிபு, மேன்முறையீடு செய்யப்பட்டதிலிருந்து மூன்று வாரங்களினுள் குறித்தளிக்கப்பட்ட அலுவலரால் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் முடிபுக்கான குறித்த ஏதுக்கள் உட்பட சொல்லப்பட்ட முடிபுக்கான காரணங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.*

கோரப்பட்ட தகவல் மேன்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதென்ற பகிரங்க அதிகார சபையின் பதிலுக்குமைவாக இம்மேன்முறையீடு முடிவுறுத்தப்படுகின்றது. வழங்கப்பட்ட தகவல் மேன்முறையீட்டாளருக்கு திருப்தியளிக்கவில்லையாயின் இவ்வாணை கிடைக்கப்பெற்று ஒரு மாத காலத்தனுள் இவ்வாணைக்குழுவுக்கு அது தொடர்பில் எழுத்து மூலமாக அறிவிக்கலாம் என மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்படுகின்றது.

கட்டணங்கள் மற்றும் மேன்முறையீட்டு நடைமுறைகள் பற்றிய ஆணையத்தின் விதிகள் [வர்த்தமானி இலக்கம்.2004/66,03.02.2017] விதி 27[3] இன் படி இருகட்சிக்காரருக்கும் உத்தரவு கொடுக்கப்பட வேண்டும்

**மேன்முறையீடு முடிவுறுத்தப்படுகின்றது**